| | ரோயல் கல்லூரி –கொழும்பு - 7<br>Royal College – Colombo - 7 | | |
|---|---|---|---|
| | தரம் - 11<br>Grade - 11 | இரண்டாந் தவணைப் பரீட்சை - தை 2022<br>Second Term Examination - Jan 2022 | |
| | தமிழ் மொழியும் இலக்கியமும்<br>Tamil Language & Literature | 22 I | 1 மணித்தியாலம்<br>1 HOURS |

**கவனிக்குக.**

- எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக. வினாத்தாள் I இற்குரிய புள்ளிகள் 40 ஆகும்.
- 1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.
- உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (x) இடுக.
- அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து அவற்றைப் பின்பற்றுக.

- **தடித்த எழுத்தில் அமைந்த சொல் பற்றிய வினாவுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க**

01. அற்றைத் திங்கள் அவ்வெண் நிலவில்...................... இங்கு **திங்கள்** என்பது

(1) கிழமை (2) மாதம் (3) சந்திரன் (4) உரிமை

02. வெண்ணிற மேகங்கள் நிலவை மூடி ஆலிங்கனம் செய்தன. இங்கு **ஆலிங்கனம்** என்பதன் பொருள்

(1) தழுவுதல் (2) ஓடுதல் (3) நிறைதல் (4) குமுறுதல்

03. நரகம் புகினும் எள்ளேன். **நரகம்** என்பதன் எதிர்ச் சொல்

(1) துரகம் (2) சுத்தம் (3) குதர்க்கம் (4) சுவர்க்கம்

04 ”..... எட்டுணையாயினும் இரவாது தான் ஈதல்” இங்கு **ஈதல்** என்பதன் எதிர்ச் சொல்

(1) கொடை (2) ஏற்றல் (3) வேட்டல் (4) கொடுத்தல்

05. உப்பு வண்டியை ஓட்டுபவர்கள்

(1) குறவர்கள் (2) கானவர்கள் (3) உமணர்கள் (4) எயினர்கள்

- **பின்வரும் வினா ஒவ்வொன்றுக்கும் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க**

06. கூட்டத்தைக் குறிக்கும் மரபுப் பெயர்களுள் பொருத்தமற்றது.

(1) அறிஞர் - அவை (2) குண்டர் - கும்பல் (3) உயிர் - கூட்டம் (4) பல் - வரிசை

07. தன் நலத்திற்காகப் பிறர் சொத்தினை அல்லது உழைப்பினைப் பயன்படுத்துதல்

(1) சர்வாதிகாரம் (2) சுயநலம் (3) சுரண்டல் (4) ஏகபோகம்

08. கொரோனா தொற்றுக் காரணமாக தற்பொழுது உலகெங்கணும் online வகுப்புக்களே அதிகம் நடைபெறுகின்றன இங்கு online என்பதற்கு நிகரான தமிழ்ச் சொல்

(1) நிகழ்தகவு (2) நிகழ்நிலை (3) நிகழ்கற்கை (4) நிகழ்வருகை

09. "நெடுநீர்க் குட்டத்துத் துடுமெனப் பாய்ந்து **"துடுமென"** என்னும் சொல் உணர்த்துவது

(1) ஒலி (2) பயம் (3) ஆச்சரியம் (4) கோபம்

10. வீணாகிப் போதலைக் குறிப்பதற்குப் பொருத்தமற்ற உவமைத்தொடர்

(1) காட்டில் எறித்த நிலாப் போல (2) விழலுக்கு இறைத்த நீர் போல

(3) மீகாமன் இல்லா மரக்கலம் போல (4) அங்கணத்துள் உக்க அமிழ்தம் போல

11. பின்வருவனவற்றுள் பொருளால் வேறுபட்ட இணைமொழி

(1) பற்றிப் படர்ந்து (2) எலும்பும் தோலும்

(3) வாடி வதங்கி (4) காய்ந்து கருகி

12. மரம், உலோகம், பாம்பு என்னும் பல பொருள் தரும் ஒரு சொல்

(1) பொன் (2) வாரணம் (3) நாகம் (4) விருட்சம்

13. "கோழி மிதித்துக் குஞ்சு சாகாது" எனும் பழமொழியின் கருத்து

(1) பழக்கத்தின் புளிப்பு (2) தெட்டத் தெளிவு

(3) உயர்ச்சியை மிஞ்சிய தளர்ச்சி (4) அன்புக் கண்டனம் அழிக்காது

14. நாம் வறுமையிலும் செம்மையாக வாழ வேண்டும் என்பதை உணர்த்தும் பழமொழி

(1) கடுகு சிறிதானாலும் காரம் பெரிது (2) காகம் திட்டி மாடு சாகாது

(3) கந்தையானாலும் கசக்கிக் கட்டு (4) கண் கெட்டபின் சூரிய நமஸ்காரமா?

15. "ஆத்திரத்தோடு நண்பர் அவுக்கென எழும்பி இரண்டில் ஒன்று பார்ப்பது என்று பாய்ந்து வந்தார்" இங்கு **அவுக்கென** என்னும் சொல் உணர்த்தும் சொல்

(1) கோபம் (2) பயம் (3) விரைவு (4) ஆச்சரியம்

16. ஒரே சமயத்தில் பதினாறு விடயங்களை அவதானிக்கும் ஆற்றல் படைத்தவன்

(1) அட்டாவதானி (2) சோடசவதானி (3) தசாவதானி (4) சதாவதானி

17. பசியுண்டாதல் எனும் பொருள் தரும் மரபுத்தொடர்

(1) வயிறு கடித்தல் (2) வயிறு வாய்த்தல்

(3) வயிறு குளிர்தல் (4) வயிறு கழுவுதல்

18. மாட்டிலே பாலைக்கறக்கும் போது சர சரவென விழும் பால். இங்கு **சரசர** என்பது

(1) இரட்டைக்கிளவி (2) இணைமொழி

(3) அடுக்குத்தொடர் (4) அடுக்கிடுக்குத் தொடர்

19. கிழக்குப் பிரதேச வழக்கில் துரவு எனப்படுவது

(1) சூட்டுக்களம் (2) அழகு (3) சிறுகேணி (4) பற்றை

20. சபையில் சொல்லத் தகாத சொல்லை மறைத்து வேறு வகையில் சொல்லுவது

(1)மற்றொன்று விரித்தல் (2)மறைமொழி (3) ஓம்படைக்கிளவி (4) இடக்கரடக்கல்

- **பின்வரும் வினா ஒவ்வொன்றுக்கும் மிகச் சரியான விடையைத் தெரிவு செய்க**

21. பின்வருவனவற்றுள் காரண இடுகுறிப்பெயராக அமைவது

(1) நிலம் (2) பறவை (3) மண்வெட்டி (4) முள்ளி

22. ககரம் g என்னும் ஆங்கில எழுத்துக்கு நிகராக ஒலிக்கும் சொல்

(1) தங்கம் (2) பக்கம் (3) மேகம் (4) கதவு

23. "நீ கூடாதவரோடு கூடித்திரிகிறாய் இனிக் கெட்டாய்" இது

(1) இட வழுவமைதி (2) கால வழுவமைதி (3) திணை வழுவமைதி (4) பால் வழுவமைதி

24. பின்வருவனவற்றுள் எழுவாய் வெளிப்பட்டுத் தோன்றாத வாக்கியம்

(1) ஐந்தில் வளையாது ஐம்பதில் வளையுமா? (3) அழுதபிள்ளை பால் குடிக்கும்

(2) பழகப் பழகப் பாலும் புளிக்கும் (4) இரக்கப் போனாலும் சிறக்கப் போ

25. பின்வருவனவற்றுள் விகுதியால் காலங்காட்டும் தெரிநிலை வினைமுற்று

(1) உண்டான் (2) உண்பான் (3) பாடுகின்றது (4) பாடும்

26. பொருத்தமற்ற உதாரணம் இடம்பெறும் சொற் தொகுதி

(1) தெரிநிலை வினை - கூறுவான், படிக்கிறாள், எழுதினார்

(2) பெயரெச்சம் - வந்த, பாடிய, நடந்து

(3) பகாப்பதம் - மண், கல், நட

(4) உரிச்சொல் - சால, உறு, நனி

27. "நாடு ஓங்கட்டும்" இதில் வரும் ஓங்கட்டும் என்பது

(1) வியங்கோள் வினை (2) குறிப்பு வினை (3) ஏவல் வினை (4) கூட்டு வினை

28. பின்வரும் வாக்கியங்களில், செயப்பாட்டு வினை வடிவத்திற்கு மாற்ற முடியாத வாக்கியம்

(1) நான் கதை எழுதினேன்
(2) ஆசிரியர் வகுப்பறைக்குள் வந்தார்
(3) ஆனந்த சமரக்கோன் தேசிய கீதத்தை இயற்றியவர்
(4) நீங்கள் நன்றாக ஓவியத்தை வரைந்தீர்கள்

29. கிழக்குத் திசை என்பது

(1) உம்மைத்தொகை (2) வினைத்தொகை (3)பண்புத்தொகை (4) இருபெயரொட்டுப் பண்புத்தொகை

30. அகராதி ஒழுங்கில் அமைந்த தொகுதி

(1) கீரி, குதிரை, கூடு, கொப்பு (2) சேதி, பாதி, சாதி, நீதி

(3) ஆலை, காலை, வேலை, சாலை (4) நாடு, நேர்மை, நன்மை, நிறம்

- **புள்ளிக் கோடிட்ட இடத்தை நிரப்புவதற்கு மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க**

31. போக்குவரத்து விதிகளை மீறிய வாகன சாரதிகளுக்குப பொலிசார்.................................................. விதித்தனர்.

(1) கட்டுப்பணம் (2) வரிப்பணம் (3) சந்தாப்பணம் (4) தண்டப்பணம்

32. ..................................... என்பது நூலின் தொடக்கத்தில் அதன் ஆசிரியரால் எழுதப்படுவதாகும்.

(1) முன்னுரை (2) தொடக்கவுரை (3) அணிந்துரை (4) தலைமையுரை

33.பாராளுமன்றத்தில் ஏற்பட்ட அமளி துமளியால் ............................. சபை நடவடிக்கைகளைப் பத்து நிமிடங்களுக்கு ஒத்தி வைத்தார்

(1) ஆணையாளர் (2) சபாநாயகர் (3) முதலமைச்சர் (4) முகாமையாளர்

34. இவ்வழியால் எவரும் செல்லக்கூடாது என பொலிஸார் தடைவிதித்த போதும் அம்புலன்ஸ் வண்டிகளுக்கு ......................................... அளிக்கப்பட்டது.

(1) மானியம் (2) நன்கொடை (3) விதிவிலக்கு (4) கொடுப்பணவு

- **வாக்கியங்களின் முற்பகுதிக்குப் பொருத்தமான முடிக்கும் பகுதியைத் தெரிவு செய்க**

35.பொலிசார் சம்பவம் நடைபெற்ற இடத்திற்கு விரைந்து சென்றிருந்தால் நிலைமையைத் தமது கட்டுப்பாட்டக்குள் .....................................

(1) கொண்டுவந்தார்கள் (2) கொண்டுவந்திருக்க முடியும்
(3) கொண்டுவந்தனர் (4) கொண்டுவருகின்றார்கள்

36. கடும் வேலைப்பளுவுக்கு மத்தியிலும் நேற்று அவர் என் வீட்டுக்கு ...............................................

(1) வந்திருந்தார் (2) வந்திருப்பார்

(3) வந்திருக்கார் (4) வந்திருக்கவில்லை

- **தரப்பட்ட பாடலை அடிப்படையாகக் கொண்டு அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக.**

தென்றிசையைப் பார்க்கின்றேன் என்சொல்வேன் என்றன்
சிந்தையெல்லாம் தோள்களெல்லாம் பூரிக்குதடா
அன்றந்த லங்கையினை ஆண்ட மறத்தமிழன்
ஐயிரண்டு திசைமுகத்தும் தன்புகழை வைத்தோன்
குன்றெடுக்கும் பெருந்தோளான் கொடை கொடுக்கும் கையான்
குள்ளநரிச் செயல் செய்யும் கூட்டத்தின் கூற்றம்
என்தமிழர் மூதாதை என்தமிழர் பெருமான்
இராவணன் காண் அவன் நாமம் இவ்வுலகம் அறியும்

37. இப்பாடலில் கவிஞர் கூற விரும்புவது

(1) தென்றிசையின் சிறப்புக்களை (2) கொடையின் சிறப்புக்களை

(3) இராவணனின் பெருமைகளை (4) இவ்வுலகத்தின் பெருமைகளை

38. இப்பாடலில் வெளிப்படும் உணர்ச்சி

(1) பெருமிதம் (2) சோகம்

(3) துக்கம் (4) பயம்

39. இங்கு இராவணன் பற்றிய கூற்றுக்களில் பொருத்தமற்றது

(1) கொடை கொடுப்பவன் (2) குள்ளநரிச் செயல்கள் செய்பவன்

(3) தமிழர்களின் மூதாதை (4) பெரும் புகழையும் வீரத்தையும் உடையவன்

40. **கீழே சில வாக்கியங்கள் ஒழுங்கின்றிக் காணப்படுகின்றன. அவற்றை ஒழுங்குபெறவைத்தால் கட்டுக்கோப்பான பந்தியொன்று அமையும். அவ்வாறு பந்தியை அமைப்பதற்கு மிகப் பொருத்தமான வைப்பு முறையைத் தெரிவு செய்க.**

(அ) ஒரு நாள் நடுப்பகலாகியும் குயிலின் குரலைக் கேட்காததால் அவர் உண்ணாமல் இருந்தார்

(ஆ) கூவியது தன் மகனே தவிரக் குயிலன்று என்பதைத் தெரிந்து கொண்ட தாயார் காந்தியைக் கண்டித்து, மனிதன் என்பவன் உண்மையின் வடிவம், அவன் எந்தச் சூழ்நிலையிலும் பொய் பேசக் கூடாது என்றார்.

(இ) காந்தியின் தயார் விரதம் அனுஷ்டிக்கும் போது குயிலின் ஓசையைக் கேட்ட பின்பே உணவு அருந்துவது வழக்கம்

(ஈ) இதனால் வேதனையடைந்த காந்தி குயில் போலக் கூவினார்

(உ) அன்றிலிருந்து காந்தி உண்மையைத் தவிர வேறெதையும் பேசுவதில்லை

(1) இ, அ, ஈ, ஆ, உ

(2) இ, அ, ஈ, உ, ஆ

(3) இ, அ, உ, ஈ, ஆ

(4) அ, இ, ஈ, ஆ, உ

(40 x 1 = 40 புள்ளிகள்)

| | | |
|---|---|---|
| | ரோயல் கல்லூரி – கொழும்பு – 7<br>Royal College Colombo – 7 | |
| தரம் - 11<br>Grade- 11 | இரண்டாந் தவணைப் பரீட்சை - தை 2022<br>Second Term Examination - JAN 2022 | |
| தமிழ் மொழியும் இலக்கியமும் II<br>Tamil Language & Literature II | **22 II** | 2 மணித்தியாலங்கள்<br>2 HOURS |

**கவனிக்குக:-**

- **எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக. விடைகளைத் தெளிவான கையெழுத்தில் எழுதுக.**
- **இவ்வினாத்தாளுக்குரிய புள்ளிகள் 80 ஆகும்.**

1. **பின்வருவனவற்றுக்குச் சுருக்கமான விடை எழுதுக.**

I) பின்வரும் தொடரை சந்தி பிரித்தெழுதுக.

மறையென லறியா மாயமி லாயமொடுயர்

II) ”ஒனக்கு நன்ம கெடக்கும் இதக்கொஞ்சும் குடுத்துட்டு வா புள்ள”

இக் கூற்றை எழுத்து வழக்கு நடையில் எழுதுக.

III) பண்டே பழகியிருந்தாலும் அறியார் புல்லர் - இவ்வாக்கியத்தின் எழுவாய் பயனிலைகளைத் தருக.

IV) ”நூலகம் உங்களால் அமைக்கப்பட்டது” இதனைச் செய்வினை வாக்கியமாக மாற்றி எழுதுக.

V) இடைவெளிகளை நிரப்புவதற்குப் பொருத்தமான சொற்களைத் தெரிவு செய்க.

குரங்கினத் தலைவனான ....................................... (வாலி, வாளி, வாழி) மேல் இராமன் ஏவிய (வாலி, வாளி, வாழி ) ..................அவன் மார்பில் தங்கியது.

VI) மலை என்னும் சொல் பெயராகவும் வினையாகவும் அமையுமாறு தனித் தனி வாக்கியங்கள் எழுதுக.

VII) ”தலைவிதி வசம் நடந்து முடிந்தது” இதில் இடம்பெற்றுள்ள அணியை எடுத்தக்காட்டி விளக்குக.

VIII) முகவரி, உள்முகவரி, விடயத்தலைப்பு, செய்தி, விளிப்பு, ஒப்பம், முடிப்பு - இவற்றுள் உறவு முறைக் கடிதத்தில் இடம்பெறாத உறுப்புகள் யாவை?

IX) பின்வரும் சொற்களை ஒழுங்குபடுத்தி வாக்கியமாக்குக.

தொண்டை / என்னும் / சேர்ந்தவர் / மண்டலத்தில் / ஊரைச் / கலண்டை / புலவர் / படிக்காசுப்

(X) பத்து இலட்சம் ரூபா பெறுமதியான குப்பை அகற்றும் இயந்திரம் கொள்வனவு செய்யப்பட்டது. இந்த வாக்கியத்தில் காணப்படும் பொருள் மயக்கத்தை இனங்கண்டு, வாக்கியத்தைத் திருத்தி எழுதுக.

( 20 புள்ளிகள்)

2. **பின்வருவனவற்றுள் ஒன்றைத் தெரிவுசெய்து ஏறத்தாழ 250 சொற்களில் அமையுமாறு விடை எழுதுக. நீங்கள் தெரிவு செய்த விடயத்துக்குப் பொருத்தமான தலையங்கம் இடுக.**

**(அ** உழவுத் தொழில் உலகைக் காக்கும் தொழில். பசிப்பிணியிலிருந்து உலகத்தை மீட்சி பெற வைக்கின்றது. உழவன் சேற்றிலே கால் வைக்காதவிடத்து உலகோர் சோற்றில் கைவைக்க முடியாது. இருப்பினும் உழவன் படும் இன்னல்கள் சொல்லில் அடங்கா. உழவனுடைய வாழ்க்கை மேம்பட வேண்டும். அவனுடைய வாழ்க்கை மேம்பாட்டுக்கு பல நலத்திட்டங்கள் உருவாக்கப்பட வேண்டும். நாடும் உணவு உற்பத்தியில் தன்னிறைவு அடைய வேண்டும் ஆகிய கருத்துக்களை உள்ளடக்கிய **ஒரு விளக்கக் கட்டுரை**

**ஆ)** ஒருவன் ஏட்டுக்கல்வியால் மட்டும் முழு மனிதனாகி விட முடியாது. அவன் நற்பிரசையாவதற்கு அறநெறிக்கல்வியும் மிக அத்தியாவசியமானது. ஒழுக்கமில்லாத கல்வியை உடையவன் அணுக்குண்டுக்குச் சமனாவான். தற்கால மாணவர்கள் அறநெறிக்கல்வியில் நாட்டம் கொள்வதில்லை. இதனால் மாணவர்களிடம் இருக்க வேண்டிய அன்பு, பண்பு, விட்டுகொடுப்பு, சகிப்புத்தன்மை, கீழ்படிவு போன்றவை யாவும் கேள்விக்குறியாகி உள்ளன. மாணவர்கள் அற ஒழுக்கப் போதனைகளைப் பின்பற்ற வேண்டும். அதற்காகப் பலரும் பாடுபட வேண்டும் என்னும் நோக்கில் அமைந்த **ஒரு மேடைப் பேச்சு.**

**(இ)** எமது நாட்டுப் பொருளாதாரத்தில் உல்லாசப் பயணத்துறையும் பெரும்பங்காற்றுகின்றது. உல்லாசப் பயணிகளின் வருகை சாதகமாக அமைந்தாலும் பாதகமான விளைவுகளும் இல்லாமல் இல்லை. அந்த வகையில் சாதகமான விளைவுகளே அதிகம் என்ற கருத்துடைய ஒருவருக்கும் பாதகமான விளைவுகளே அதிகம் என்னும் கருத்துடைய இன்னொருவருக்குமிடையேயான **ஓர் உரையாடல்**

**(ஈ)** அவன் நன்றாக உழைத்து சம்பாதித்தான். பணம் சேர்ந்தது எனினும் அத்தியவசியத் தேவைகளுக்குக் கூடச் செலவளிக்க அவன் மனம் விரும்பவில்லை. மனைவி பிள்ளைகளின் அன்றாட தேவைகளைக் கூட அவன் நிறைவேற்றவில்லை... ஆனால் நடந்தது என்ன? ஈயார்தேட்டைத் தீயார் கொள்வர் என்ற படிப்பினை புலப்புடும் படியாக **ஒரு சிறுகதை**

(25 புள்ளிகள்)

3. கீழே தரப்பட்டுள்ள உரைப் பகுதியின் சுருக்கத்தை 40 – 45 சொற்களில் அமையக் கூடியவாறு எழுதுக. **(சொற்களின் எண்ணிக்கையைக் குறிப்பிடுக.)**

கல்வி நமக்குப் பல நன்மைகளைத் தருகின்றது. கல்வியினால் நம் அறிவு வளர்கிறது. கல்வியால் நாம் தொழில் பெறுகின்றோம். கற்றவர்களை உலகம் மதிக்கின்றது. எல்லாவற்றுக்கும் மேலாக கல்வி நமக்குக் கடவுள் உண்மையை அறிவுறுத்தி நாம் கடவுளை அடையத் துணை செய்கின்றது. கடவுளை வணங்கத் துணை செய்யாத கல்வி சிறந்த கல்வியாகாது.

”கற்றதனாலாய பயனென் கொல் - வாலறிவன்

நற்றார் தொழார் எனின்”

என்பார் திருவள்ளுவர். கல்வியின் மூலம் கடவுளின் குண விசேடங்களையும் அவரை அன்பு செய்யும் முறைகளையும் அறிகின்றோம். அவ்வாறு அறிவதனால் நமக்குக் கடவுளிடத்தில் அன்பு உண்டாகின்றது. அவ்வன்பு கடவுட்பணியில் நம்மை ஈடுபடுத்துகின்றது. கடவுட்கொள்கை இல்லாதவர்கள் கல்வியினால் கடவுள் நம்பிக்கையை பெறுகின்றார்கள். கடவுட்கொள்கை உள்ளவர்கள் கல்வியினால் சமய வாழ்வில் ஊக்கமடைகிறார்கள்.

கல்வியைப் போலவே கடவுட் கொள்கையைப் பெறுவதற்கும் இளமைப்பருவமே ஏற்ற காலமாகும். இளமையிற் பழகிய பழக்கவழக்கங்கள் எக்காலத்தும் நிலைத்து நிற்கும். ”தொட்டிலிற் பூண்ட குணம் சுடுகாடு மட்டும்” ஆதலினால் தமது பழக்கவழக்கங்களை சிறு வயதிலேயே திருந்தியனவாகக் கற்றுக்கொள்ள வேண்டும். கடவுள் நம்பிக்கையையும் கடவுட்தொண்டையும் இளமையிலேயே போதித்தால் அஃது ஒருவரது வாழ்க்கை முழுவதும் கலந்து நிற்கும். வாழைப்பழத்தில் இலகுவாக ஊசி ஏற்றுவது போல் சிறுவர் மனத்திலும் கடவுள் நம்பிக்கை நன்கு பதியும். அவ்வாறே நற் பழக்கவழக்கங்களையும் இளமையிற் பழகிக்கொள்ளுதல் எளிதான காரியமாகும். இளமையிற் கற்றுக்கொள்ளாது வயது வந்தபின் நற்பழக்கவழக்கங்களை மேற்கொள்ளலாமெனல் பொருந்தாது.

(10 புள்ளிகள்)

4. **பின்வரும் உரைநடைப் பகுதியை வாசித்து அதன்கீழ்த் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.**

இலக்கியங்கள் மெத்த வளருகிற மேல்நாட்டில் அந்நாட்டு திறனாய்வாளர்கள் அவ் இலக்கியங்களை இருவகையாகப் பிரிப்பர். இன்பம் தரும் இலக்கியம் என்றும் பயன் தரும் இலக்கியம் என்றும் இரு வகைப்படுத்துவர். ஆனால் , நம்முடைய நாட்டைப் பொறுத்தமட்டில் இன்பம் தரும் ஒரே குறிக்கோளாக இலக்கியம் ஆக்கப்படுவதில்லை.

வாழ்க்கைக்குப் பயன்படுவதே இலக்கியத்தின் முக்கிய குறிக்கோளாகும். நீதி நூல்களும் வாழ்க்கைக்குப் பயன்படுகின்றன என்றாலும் நீதி நூல்களில் இருந்து இலக்கியம் மாறுபடுகின்ற இடம் உண்டு. நீதி நூல் திருத்துகின்ற ஆசானைப்போல் நேரிடையாக அறிவுரைகளை வழங்கும். அதனை கேட்பவர் இன்பம் பெறும் நோக்கம் கொண்டவராக இருப்பின் நீதி நூல் அவரிடம் செல்லாது. இலக்கியமோவெனில் வாழ்க்கைக்குத் தேவையான அறிவுரைகளை வழங்குவதெனினும் அது ஆசான் வேலையைச் செய்கிறது என்று கண்டுகொள்ள முடியாமலேயே அதனைச் செய்து விடுகிறது. இலக்கிய இன்பம், சர்க்கரை தடவிய மாத்திரை போல் கற்போர் உட்புகுந்து நற்பயனை விளைவிக்கின்றது.

I. மேனாட்டுத் திறனாய்வாளர்கள் இலக்கியத்தை எவ்வாறு வகைப்படுத்துகின்றனர்?

II. நம்முடைய நாட்டில் இலக்கியம் படைக்கப்படுவதன் பிரதான நோக்கம் யாது?

III. ”நீதி நூல்கள் இலக்கிய வகை ஒன்றைச் சார்ந்தனவாகும்” இக் கூற்று மேற்படி பந்தியில் ஆசிரியருக்கு உடன்பாடானதா?

IV. இலக்கியங்கள் மக்களுக்கான அறிவுரையை எவ்வாறு வழங்குகின்றன?

V. ”சர்க்கரை தடவிய மாத்திரை” என்ற உவமை மூலம் நம் நாட்டு இலக்கியத்தின் தன்மை எவ்வாறு உணர்த்தப்படுகிறது?

(10 புள்ளிகள்)

5.

உமது பிரதேசத் தபாலகத்தில் நிலவும் குறைபாடுகளினால் பொதுமக்களுக்கு ஏற்பட்டுள்ள பிரச்சினைகளைச் சுட்டிக் காட்டியும், அவற்றை நிவர்த்தி செய்து உதவுமாறு கோரியும் தபால் மா அதிபரை விநயமாகக் கேட்டு 100 சொற்களில் அமையுமாறு ஒரு **கடிதம்** எழுதுக.

**அல்லது**

உமது பாடசாலையின் விளையாட்டுக் குழுவின் செயலாளராக உம்மைக் கருதிக் கொண்டு, உமது பாடசாலையில் நடைபெறவிருக்கும் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி தொடர்பான செய்தியினைப் பிரசுரிப்பதற்காகப் பின்வரும் அம்சங்களை உள்ளடக்கி 100 சொற்களில் அமையுமாறு **பத்திரிகைச் செய்தி** ஒன்று எழுதுக.

- பாடசாலையின் பெயர்
- காலமும் நேரமும்
- நிகழ்ச்சிகள்
- இல்லங்கள் பற்றிய விபரங்கள்
- பிரதம அதிதி, சிறப்பு அதிதிகள்
- அனுசரணையாளர்கள் (15 புள்ளிகள்)

| | | |
|---|---|---|
| ரோயல் கல்லூரி – கொழும்பு – 7<br>Royal College – Colombo – 7 | | |
| தரம் - 11<br>Grade - 11 | இரண்டாந் தவணைப் பரீட்சை - தை 2022<br>Second Term Examination - JAN 2022 | |
| தமிழ் மொழியும் இலக்கியமும் III<br>Tamil Language & Literature III | 22 III | 2 மணித்தியாலங்கள்<br>2 HOURS |

**கவனிக்குக:**
- **அறிவுறுத்தலுக்கேற்ப ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக.**
- **1, 2, 3, 4 ஆகிய வினாக்களுக்கும் 5, 6, 7 ஆகிய வினாக்களில் ஏதாவது ஒரு வினாவுக்கும் விடை எழுதுக.**
- **இவ்வினாத்தாளுக்குரிய புள்ளிகள் 80 ஆகும்.**

**(1) சுருக்கமான விடை தருக.**

I) ”சிரித்த முகம் தங்க சொரூபம் அப்பொழுது தான் சென்னைப் பட்டினத்திலிருந்து படித்து விட்டு வந்தவர்

(அ) இவ்வாறு புகழப்பட்டவர் யார்?

(ஆ) இக் கூற்று இடம் பெறும் பாடப்பகுதி எந்நூலில் இடம் பெற்றுள்ளது?

II) ”மதியிழந்து தன்வாயிழந்து அருந்தவன் மறைந்தான்”

(அ) மதியிழந்து என்பதன் பொருள் என்ன?

(ஆ) அருந்தவன் எனக் குறிப்பிடப்பட்டவர் யார்?

III) ”இற்றைத் திங்கள் இவ்வெண் நிலவில்
வென்றெறி முரசின் வேந்தரெம் குன்றும் கொண்டார்”

(அ) எம் குன்று என்று குறிப்பிடப்பட்டது எது?

(ஆ) இக் கூற்று இடம்பெறும் நாடகத்தை எழுதியவர் யார்?

IV) ”புத்தகத்தை எடுத்துவிட்டு வூட்ட வா மனெ”

(அ) இக் கூற்று இடம் பெறும் சிறுகதையை எழுதியவர் யார்?

(ஆ) இக் கூற்று யாரால் கூறப்பட்டது?

V) ”வந்திருக்கக் கூடாது அவன் இன்று அலுவலுக்கு”

(அ) ”வந்திருக்கக் கூடாது அவன்” என்று கவிஞர் கூறக்காரணம் யாது?

(ஆ) இக் கூற்று இடம்பெறும் கவிதையின் தலைப்பு யாது?

VI) மதுவிலும் புலாலிலும் களித்திருந்த நட்பு நம்முடையது அருவியில் முகம் காட்டும் உன் அழகிய காட்சிகள்.

(அ) இவ்வாறு தன் ஆற்றாமையை வெளிப்படுத்தியவர் யார்?
(ஆ) எதை முன்னிலைப் படுத்தித் தன் ஆற்றாமையை வெளிப்படுத்துகின்றார்?

VII) ”ஏதிலார் ஆரத் தமர் பசிப்பர் பேதை
பெருஞ்செல்வம் உற்றக் கடை”
(அ) இங்கு ஏதிலார் எனக் குறிப்பிடப்படுபவர் யார்?
(ஆ) பேதையிடம் பெருஞ்செல்வம் சேர்ந்தால் யாது நிகழும்?

VIII) ”ஆடிக் குடத்தடையும் ஆடும் போதே இரையும்
மூடித்திறக்கின் முகம் காட்டும்”
(அ) இதில் கையாளப்பட்டுள்ள அணி யாது?
(ஆ) அந்த அணிமூலம் தொடர்புபடுத்தப்படுபவை எவை?

IX) ”கழியும் பிழைபொருட் டள்ளி நன்னூலங் கடலிலுண்டு
வழியும் பொதியை வரையினிற் கால் கொண்டு............”
(அ) இங்கு கையாளபட்ட அணி யாது?
(ஆ) இங்கு குறிப்பிடப்பட்ட மலை எது?

X) ”ஆர் தட்டினும் தட்டு வராமலே அன்னதானத்திற்கு மார் தட்டிய துரை”
(அ) இவ்வாறு சிறப்பிக்கப்படுபவர் யார்?
(ஆ) சிறப்பிப்பவர் யார்?

(10 x 2 = 20 புள்ளிகள்)

**(2) பின்வரும் செய்யுட் பகுதிகளையும் உரைநடைப் பகுதிகளையும் வாசித்து அவற்றின் கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.**

**(i)**

முழங்குதிரைப் புனலருவி கழங்கெனமுத் தாடும்
முற்றமெங்கும் பரந்து பெண்கள் சிற்றிலைக் கொண்டோடும்
கிழங்குகிள்ளித் தேனெடுத்து வளம்பாடி நடிப்போம்
கிம்புரியின் கொம்பொடித்து வெம்புதினை இடிப்போம்
செழுங்குரங்கு தேமாவின் பழங்களைப் பந்தடிக்கும்
தேனலர் சண்பகவாசம் வானுலகில் வெடிக்கும்
வழங்குகொடை மகராசர் குறும்பலவி னீசர்
வளம்பெருகும் திரிகூட மலையெங்கள் மலையே.

(அ) குறப்பெண்களின் செயல்களாக இப்பாடலில் கூறப்பட்டவை யாவை?
(ஆ) இப்பாடலில் காணப்படும் உயர்வு நவிற்சி அணியை எடுத்துக்காட்டுக.

**(ii)**

அறந்தானே யென்கின்ற வயனின்றா
டனைநோக்கி , யைய வன்பி
னிறைந்தாளை யுரையென்ன , நெறிதிறம்பாத்
தன்மெய்யை நிற்ப தாக்கி,
இறந்தான் றனிளந்தேவி, யாவர்க்குந்
தொழுகுலமா மிராமன் பின்பு
பிறந்தானு முளனென்னைப் பிரியாதான்
றனைப் பயந்த பெரியா ளென்றான்

(அ) இப்பாடலில் சுமித்திரையின் பெருமைகளாக கூறப்பட்டவை யாவை?
(ஆ) ”பிரியாதான்” எனக் குறிப்பிடப்பட்டவன் யார்?

**(iii)**

ஊனையும் உடலையும்
ஊட்டி இம் மண்ணை
உயிர்த்த வர்க்(கு) இங்கே
உளங்கசிந்தன்பும்
பூணுவாரில்லை - அப்
புதை மேட்டிலோர் - கானகப்
பூவைப் பறித்துப்
போடுவாரில்லையே!

(அ) இக் கவிதை வரிகள் யாருடைய துன்பநிலையை எடுத்துக் காட்டுகின்றன?
(ஆ)அவர்களுக்கு எவற்றைச் செய்யவில்லை எனக் கவிஞர் கூறுகின்றார்?

**(iv)** தசரதன் இரண்டு இலட்சியங்களுக்கிடையே ஊசலாடுகிறான் ஒன்று அரசியல் மற்றையது சத்தியம். இவ்விரண்டில் ஒன்றைத் தெரிவுசெய்வதில் அவன் திண்டாடுகின்றான். அரசியற் கொள்கையின்படி மூத்த பிள்ளைக்கு முடிசூட்டுவதா? அல்லது கைகேயி கூறிய சத்தியவாக்கை நிலைநாட்டுவதா? இந்தத் தர்மசங்கடத்தின் மத்தியில் ஊசலாடுகின்ற அரசன் நினைக்கின்றான் அரசியில் நிலை மாறக் கூடியது. சத்தியம் நிலை மாறாதது நிலைமாறுந் தன்மையுள்ள அரசியற் கொள்கையைக் கைவிடுவேன் நிலைமாறாத இயல்புள்ள சத்திய வாக்கை கடைப்பிடிப்பேன்.

(அ) தசரதனுக்கு ஏற்பட்ட தர்மசங்கடம் என்ன?
(ஆ)அத் தர்மசங்கடத்திற்கு அவன் கண்ட தீர்வு யாது?

**(v)** இத்தனைக்கும் ஒரு நோய் வந்தா படுக்கையில் கிடந்து அழுந்தவுமாட்டா. ஆஸ்பத்திரி என்று அலையமாட்டா. ஆடாத்தோடையும் கொத்தமல்லியும் அவித்துக் குடித்து எழுந்து நடக்குறா. அக்கம் பக்கம் யாருக்கும் நோய் பிடித்தாலும் கூப்பிடாத வைத்தியராய் ஓடிப்போய் வைத்தியம் செய்வா. ஊரில் எது நடந்தாலும் மூத்தம்மா தான் வேண்டும். ”கைராசிக்காரி நீங்கள் தான் மாமி, என்ர தலப்புள்ளய ஏந்தணும்” நேற்றும் அவ்வா ராத்தா வீங்கிய வயிற்றுடன் வந்து மூத்தம்மாவிடம் சொல்லிவிட்டுப் போனா.

(அ) மூத்தம்மாவின் சமூகப்பணி பற்றி இப்பந்தியில் கூறப்பட்டுள்ளவற்றைத் தருக?
(ஆ) இப்பந்தியில் கூறப்பட்டுள்ள விடயங்களைக் கொண்டு மூத்தம்மா பற்றி நீர் கருதுகின்ற இரண்டு விடயங்களைக் குறிப்பிடுக.

5x 4= 20 புள்ளிகள்)

**(3) ”சங்கப்பாடல்கள்” எனும் பாடப்பகுதியில்**

(அ) தலைவனின் வருகை அவசியமில்லை என வாயில்களுக்கு உரைக்கும் தோழியின் மதிநுட்பமும்
(ஆ) இளமையைத் தொலைத்த தொடித்தலை விழுத்தண்டினாரின் கையறுநிலையும் வெளிப்படுமாற்றினை விவரிக்குக.

(15 புள்ளிகள்)

**அல்லது**

**"தற்காலக் கவிதைகள்" என்னும் பாடப்பகுதியில்**

அ) சி.வி வேலுப்பிள்ளை அவர்களின் சமூக அக்கறையும்
ஆ) எழுதத் தெரியாத பையன் பற்றிய கவிஞர் சோலைக்கிளியின் மன உணர்வுகளும் சித்திரிக்கப்பட்டிருக்குமாற்றினை விளக்குக.

(15 புள்ளிகள்)

**(4) "இலட்சியமும் சமநோக்கும்" என்னும் கட்டுரையில்**

(அ) இலட்சிய வாழ்க்கையின் அவசியமும்
(ஆ) அரிசந்திரன், தசரதன் ஆகியோர் தத்தமது இலட்சியங்களில் நின்றொழுகிய விதமும் எடுத்துரைக்கப்பட்டிருக்குமாற்றினை விவரிக்குக.

**அல்லது**

**"மூத்தம்மா" என்னும் சிறுகதையில்**

(அ) கிராமப்புற மக்களின் வாழ்வியல் அம்சங்களும்

(ஆ) மூத்தம்மாவின் குடும்ப, சமூக அக்கறையும் சித்திரிக்கப்பட்டிருக்குமாற்றினை எடுத்துரைக்க.

(15 புள்ளிகள்)

**✵ 5, 6, 7 ஆகிய வினாக்களுள் ஏதாவது ஒன்றைத் தெரிவு செய்து விடை எழுதுக.**

**(5) "கம்பியூட்டர்" என்னும் சிறுகதையை அடிப்படையாகக் கொண்டு பின்வருவனவற்றை விளக்குக.**

(அ) சிறுகதையாசிரியர் கம்பியூட்டரை கொள்வனவு செய்கையில் எதிர் நோக்கிய பிரச்சினைகள்
(ஆ) அந்தப் பிரச்சினைகளை கூறுவதில் அவர் வெளிப்படுத்தும் நகைச்சுவைப் பாங்கு

(10 புள்ளிகள்)

**(6) "அற்றைத் திங்கள்" என்னும் நாடகத்தில்**
(அ) தலாட்டுப் பாடல் வெளிப்படுத்தும் போர் அழிவுகளும்
(ஆ) பறம்பு மலையின் பிரிவு குறித்த கபிலரின் துயரமும் சித்திரிக்கப்படுமாற்றினை விளக்கி எழுதுக.

(10புள்ளிகள்)

**(7) "பேதைமை என்னும் அதிகாரத்தை அடிப்படையாகக் கொண்டு பின்வருவனவற்றை விளக்குக.**
(அ) பேதைமைக்கு வள்ளுவர் கூறும் இலக்கணம்
(ஆ) பேதை அடையும் துன்பம்
(இ) பேதை கைப்பட்ட செல்வத்தின் நிலை

(10 புள்ளிகள்)